**சுருக்கம்**

கைத்தறித் தொழில் – 2022–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துதல் மற்றும் வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்ய அனுமதித்தல் – முன்பணமாக ரூ.157,38,12,500/– – ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை

அரசாணை (நிலை) எண்.85

நாள் 28.07.2021
பிலவ, ஆடி 12,
திருவள்ளுவராண்டு 2052
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.130, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 13.06.2013.
2. அரசாணை (நிலை) எண்.211, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 19.12.2018.
3. அரசாணை (நிலை) எண்.54, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 24.06.2020.
4. அரசாணை (நிலை) எண்.123, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 11.11.2020.
5. 23.02.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கை.
6. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 16–வது சட்டப் பேரவைத் தேர்தல் அறிக்கை 2021.
7. கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் கடிதம் ந.க.எண்.5065/ ப்பி1/2021, நாள் 15.02.2021.

-------

**ஆணை:**

23.02.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை குறித்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

"115) கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது, தமிழ்நாட்டில் அதிகமான வேலைவாய்ப்பு அளிக்கும் திறனைக் கொண்ட துறையாகும். ஏழை மக்களுக்கு விலையில்லா வேட்டி மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதன் காரணமாக, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது."

2. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான நூல்களை கொள்முதல் செய்யும் பொருட்டு ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கும் நிலைக் குழுவினை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000–த்தின்படி அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 14.06.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன்கீழ் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, கைத்தறி மற்றும் பெடல்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பினை உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும், அடுத்து வரும் ஆண்டிற்கான விலையில்லா வேட்டி சேலைத் திட்டத்திற்குத் தேவைப்படும் வேட்டி சேலைகளுக்கான உத்தேச உற்பத்தி திட்டத்தினை ஜனவரி மாதம் முதல் ஜுன் மாதம் முடிய வழங்க கொள்கை அளவிலான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

4. மேலே மூன்று மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை, 2021–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு தொடர்ந்து செயல்படுத்திட கொள்கை அளவிலான அனுமதியுடன் இன்னபிற நிபந்தனைகளுடன் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்த தொகையினை ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

5. மேலும், 2021–ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **"நெசவாளர் நலன்"** என்ற தலைப்பின்கீழ் வேட்டி சேலை வழங்குவது தொடர்பாக, பின்வரும் தேர்தல் அறிக்கையினை வெளியிட்டார்:–

"139. மக்களுக்கு அரசு வழங்குவதற்குத் தேவையான இலவச வேட்டி, சேலைகளை நெய்வதில் தமிழகக் கைத்தறி நெசவாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதுபோல், பள்ளிச் சீருடைகளுக்கான துணிகள் உற்பத்தி தமிழக விசைத்தறி நெசவாளர்களிடம் மட்டுமே ஒப்படைக்கப்படும்."

6. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2022–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை செயல்படுத்த உரிய ஆணைகள் வழங்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. மேற்காணும், கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2022–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கு தேவைப்படும் வேட்டி சேலைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்தி செய்து மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்க ஏதுவாக கீழ்க்கண்ட இனங்களுக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது:–

(i) <u>வேட்டி சேலை வழங்கும் திட்டம்</u>

இதுநாள் வரையில் "விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்" என்று குறிப்பிடப்பட்ட இத்திட்டம் இனிவரும் காலங்களில் "வேட்டி சேலை வழங்கும் திட்டம்" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

(ii) <u>கொள்கையளவிலான ஆணை</u>

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை பொங்கல் 2022–ஐ கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் பண்டிகைக்கு வேட்டி சேலை வழங்கவும், கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கிடவும் மற்றும் இத்திட்டத்திற்கான வேட்டி சேலைகளை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் உற்பத்தி செய்து வழங்க ஏதுவாக கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தொடர்ந்து உற்பத்தி திட்டத்தினை மேற்கொள்ளவும் கொள்கை அளவிலான ஆணையிடப்படுகிறது.

(iii) <u>வேட்டி, சேலைகளின் தேவை எண்ணிக்கையை நிர்ணயம் செய்தல்</u>

வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2021–இன்கீழ் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, முகமை நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்பட்டதுபோக, சங்கங்களின் இருப்பிலுள்ள சேலைகள் மற்றும் வேட்டிகளை பொங்கல் 2022 திட்டத்திற்கு ஆரம்ப இருப்பாக எடுத்துக் கொண்டு உற்பத்தித் திட்டம் வழங்கிடவும், பொங்கல் 2021 திட்டத்தின்கீழ் வருவாய் நிர்வாக ஆணையரின் தேவைப் பட்டியலில் தெரிவிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 1,80,41,698 சேலைகள் மற்றும் 1,80,09,279 வேட்டிகளின் உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டு பொங்கல் 2022 உற்பத்தி திட்டத்திற்கு குறியீடு நிர்ணயம் செய்தும் மற்றும் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் வழங்கும் மாவட்ட வாரியான தேவையின் அடிப்படையில் திருத்திய உற்பத்தி குறியீட்டினை பின்னர் நிர்ணயம் செய்யவும் ஆணையிடப்படுகிறது.

(iv) <u>கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வேட்டி, சேலைகள் உற்பத்தி செய்தல்</u>

வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு தேவையான வேட்டி, சேலைகளை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இத்திட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ள கைத்தறிகள் மற்றும் பெடல் தறிகளின் முழு உற்பத்தித் திறன்போக எஞ்சிய தேவையினை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்திடவும் ஆணையிடப்படுகிறது.

(v) <u>கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் 2022–ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய (6 மாதங்கள்) தொடர்ந்து உற்பத்தி திட்டம் வழங்குதல்</u>

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலுள்ள கைத்தறி மற்றும் பெடல்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு, ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை உற்பத்தி திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிலையில், வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் 2022–ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய (6 மாதங்கள்) அடுத்து வரும் ஆண்டிற்கான வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் வேட்டி சேலைகளை உற்பத்தி செய்வதற்கான உத்தேச உற்பத்தி திட்டத்திற்கான கொள்கை அளவிலான ஆணையும் மற்றும் ஜனவரி முதல் ஜூன் முடிய உற்பத்தி செய்யப்படும் வேட்டி சேலைகளை அடுத்த ஆண்டு திட்டத்திற்கு ஆரம்ப இருப்பாக கொண்டு செல்வதற்கு அனுமதி அளித்தும் ஆணையிடப்படுகிறது.

(vi) <u>நூல் கொள்முதல் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கும் குழுவினை நியமித்தல்</u>

வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான நூல்களை கொள்முதல் செய்வதற்காக, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அமைக்கப்பட்ட நிலைக் குழுவுடன், தற்போது, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்காக நியமிக்கப்பட்ட நிதித் துறையின் அலுவலரான திரு. சிபி ஆதித்யா செந்தில் குமார், இ.ஆ.ப., துணைச் செயலாளர் அவர்களையும் உறுப்பினராக உள்ளடக்கிய கொள்முதல் குழுவே, 2022–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்குத் தேவையான நூல்களில், கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் உற்பத்தி செய்து வழங்க இயலும் நூல் தவிர, எஞ்சிய நூல்களை கொள்முதல் செய்வதற்குரிய ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் குழுவாக நியமித்து ஆணையிடப்படுகிறது.

(vii) <u>வேட்டி, சேலைகளின் தர அளவீடுகள் (Specification)</u>

கைத்தறி, பெடல்தறி மற்றும் விசைத்தறி வேட்டி, சேலைகளுக்கு கடந்த ஆண்டு நிர்ணயித்த தர அளவீடுகள் போலவே இந்த ஆண்டும் கீழ்க்காணும் தர அளவீடுகள் (Specification) நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது:–

<u>கைத்தறி / பெடல்தறி</u>

| வ. எண் | தர அளவீடுகள் | கைத்தறி / பெடல்தறி சேலைகள் | கைத்தறி / பெடல்தறி வேட்டிகள் |
|---|---|---|---|
| 1. | பாவு நூல் எண். | 40s பருத்தி கலர் சிட்டா நூல் | 60s பருத்தி கிரே கோன் நூல் |
| 2. | ஊடை நூல் எண். | 80/34D கலர் பாலியஸ்டர் நூல் | 80/34D கிரே பாலியஸ்டர் நூல் |
| 3. | கரை நூல் எண். | --- | 2/80s பருத்தி கலர் சிட்டா நூல் |
| 4. | அச்சு எண். | 56 | 72 |
| 6. | ஒரு அங்குலத்திற்கு ஊடை இழைகளின் எண்ணிக்கை | 56 | 70 |
| 7. | துணியின் அகலம் | 45 அங்குலம் (115 செ.மீ.) | 50 அங்குலம் (127 செ.மீ) |
| 8. | துணியின் நீளம் | 5.50 மீட்டர் | 3.65 மீட்டர் |

<u>விசைத்தறி</u>

| வ.எண் | தர அளவீடுகள் | விசைத்தறி சேலை | விசைத்தறி வேட்டி |
|---|---|---|---|
| 1. | பாவு நூல் எண். | 60s ரகம் சாயமிட்ட பருத்தி நூல் | 40s ரகம் பருத்தி நூல் |
| 2. | ஊடை நூல் எண். | 80/34D சாயமிட்ட பாலியஸ்டர் நூல் | 80/34D கிரே பாலியஸ்டர் நூல் |
| 3. | கரை நூல் எண். | 150D காட்லூக் சாயமிட்ட பாலியஸ்டர் நூல் | 155D 250 TPM சாயமிட்ட பாலியஸ்டர் நூல் |
| 4. | ஒரு அங்குலத்திற்கு பாவு இழைகளின் எண்ணிக்கை | 68 | 64 |
| 5. | ஒரு அங்குலத்திற்கு ஊடை இழைகளின் எண்ணிக்கை | 68 | 64 |
| 6. | துணியின் அகலம் | 45 அங்குலம் (115 செ.மீ.) | 50 அங்குலம் (127 செ.மீ.) |
| 7. | துணியின் நீளம் | 5.50 மீட்டர் | 3.75 மீட்டர் |

விசைத்தறி சேலைகள் மற்றும் வேட்டிகளுக்கு, கீழ்க்குறிப்பிட்டுள்ள இசைவிணக்க (Tolerance) தர அளவீடுகள் நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது:-

| தர அளவீடு | தேவையான அளவீடு | இசைவிணக்க (Tolerance) தர அளவீடு |
|---|---|---|
| | **அகலம்** | |
| சேலை | 45 அங்குலம் | ± 2% |
| வேட்டி | 50 அங்குலம் | ± 2% |
| | **நீளம்** | |
| சேலை | 5.50 மீட்டர் | ± 2% |
| வேட்டி | 3.75 மீட்டர் | ± 2% |

(viii) <u>முகமை நிறுவனம் நியமித்தல்</u>

இப்பணியினை செவ்வனே செய்து குறித்த காலத்தே குறியீடுகளை அடையும் பொருட்டு, முகமை நிறுவனம் / நிறுவனங்கள் நியமனம் செய்யும் முழு அதிகாரத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையருக்கு வழங்கி ஆணையிடப்படுகிறது.

(ix) <u>தொடர் வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் உத்தேச உற்பத்தி திட்டத்திற்கு தேவையான தொகையினை வழங்கக் கோருதல்</u>

வேட்டி சேலை வழங்கும் திட்டம் பொங்கல் 2022-ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்யப்படும் நிதியில் 2021-2022-ஆம் ஆண்டு செலவினம்போக கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் தன் வைப்பு கணக்கில் எஞ்சிய இருப்பாக இருக்கும் தொகையிலிருந்து கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு 2022-2023-ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட உள்ள உற்பத்தி திட்டத்திற்கு செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

(x) <u>ஒப்பளிப்பு செய்யப்படும் நிதியினை வரவு செலவு செய்ய தன்வைப்பு கணக்கு (Personal Deposit Account) துவக்குதல்</u>

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை பொங்கல் 2022-ஆம் ஆண்டிற்கு தொடர்ந்து செயல்படுத்திட ஏதுவாக இத்திட்டத்திற்கு ஒப்பளிக்கப்படும் நிதியினை வரவு செலவு செய்து, உரிய நேரத்தில் திட்டத்தினை நிறைவு செய்திடும் பொருட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அவர்களின் பெயரில் ஏற்கெனவே ரிசர்வ் வங்கி சென்னை கிளையில் பராமரிக்கப்பட்ட தன்வைப்பு கணக்கு எண்.1652301001 (Personal Deposit Account) தொடர்பாக பின்வரும் ஆணைகள் வழங்கப்படுகிறது:-

அ) வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யும் தொகையினை வரவு வைக்க கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் பெயரில் தன்வைப்பு கணக்கு எண்.1652301001–ஐ மீள துவங்கிட அனுமதியும்,

ஆ) இத்திட்டத்திற்கென ஒப்பளிப்பு செய்யப்படும் தொகையை கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் பெயரில் துவக்கப்படும் தன்வைப்பு கணக்கில் (DP Code 8443 00 106 AA 80102) (Receipts) என்ற கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைக்க அனுமதியும்,

இ) தன் வைப்பு கணக்கிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு (DP Code 8443 00 106 AA 80202) (Outgoings) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்க அனுமதியும்,

ஈ) இவ்வாறு ஆணையர் பெயரில் துவக்கப்படும் தன்வைப்பு கணக்கினை சம்பள கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னை பராமரித்திடவும், சேலை மற்றும் வேட்டி உற்பத்திக்கு தேவையான நூல் கொள்முதல் செய்ததற்கான தொகையும், சங்க உறுப்பினர்களுக்கு வழங்க தேவைப்படும் கூலி முன்பணம் மற்றும் இத்திட்டம் தொடர்பான இதர செலவினங்களை மேற்கொள்ளவும், தொகை ஒப்பளிப்பு செய்யப்படும் அதிகாரம் ஆணையருக்கு வழங்கியும்,

உ) அரசால் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகையினை பட்டியல் மூலம் பெற்று தன்வைப்பு கணக்கில் இட்டு வைத்து செலவினம் மேற்கொள்ள கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் ஆணையிடப்படுகிறது.

(xi) <u>நிதி ஒப்பளிப்பு</u>

2021–2022–ஆம் ஆண்டின் இடைக்கால வரவு செலவு திட்டத்தில், வேட்டி சேலை வழங்கும் திட்டம் பொங்கல் 2022–ஐ செயல்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ.484,25,00,000/–இல் முதல் தவணை 32.50 விழுக்காட்டு தொகையான (ஏப்ரல் முதல் ஜூன் முடிய) ரூ.157,38,12,500/– (ரூபாய் நூற்று ஐம்பத்தேழு கோடியே முப்பத்து எட்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது. இத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் அடிப்படையில், தேவைப்படும் தொகையானது தகுந்த நேரத்தில் ஒப்பளிப்பு செய்யப்படும்.

8. மேலே பத்தி 7(xi)–இல் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகையினை தொடர்புடைய சரக உதவி / இணை இயக்குநருக்கு விடுவிக்க கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது. அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட சரக உதவி இயக்குநர்கள் மாவட்ட கருவூலம் / சார் நிலை கருவூலம் / சம்பள கணக்கு அலுவலகத்தில் பட்டியல் மூலம் சமர்ப்பித்து நூல் கொள்முதல்

செய்ததற்கான தொகையும், கூலி முன்பணம் மற்றும் இத்திட்டம் தொடர்பான இதர செலவினங்களை மேற்கொள்ளவும், அதற்குரிய தொகைகளை ஒப்பளிப்பு செய்யும் அதிகாரத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையருக்கு வழங்கி ஆணையிடப்படுகிறது.

9. மேலே பத்தி 7(xi)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்க வேண்டும்:–

| கணக்குத் தலைப்பு | தொகை (ரூபாயில்) |
|---|---|
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத்திட்டங்கள் – 200. ஏனைய திட்டப்பணிகள் – மாநிலச் செலவினங்கள் – JK. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு இலவசமாக கைத்தறித் துணி வழங்குதல் – 311. மானியங்கள் – 02. பொதுவான மானியம்<br><br>(தகவல் தொகுப்பு குறியீடு 2235 60 200 JK 31102) | 116,67,50,000/– |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 789. ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக்கூறுகள் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JS. சிறப்புக்கூறுகள் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு இலவசமாக கைத்தறித் துணி வழங்குதல் – 311. மானியங்கள் – 02. பொதுவான மானியம்<br><br>(தகவல் தொகுப்பு குறியீடு 2235 60 789 JS 31102) | 39,00,00,000/– |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் – 796. பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JB வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு இலவசமாக கைத்தறித் துணி வழங்குதல் – 311. மானியங்கள் – 02. பொதுவான மானியம்<br><br>(தகவல் தொகுப்பு குறியீடு 2235 60 796 JB 31102) | 1,70,62,500/– |
| மொத்தம் | 157,38,12,500/– |

10. மேலே பத்தி 7(iii)–இல் தெரிவித்தபடி, பொங்கல் 2022–ஆம் ஆண்டிற்கான வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கான மாவட்ட வாரியாக தேவைப்படும் வேட்டி சேலைகளின் எண்ணிக்கையினை கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையருக்கு தெரிவிக்கும்படி வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை, நிதி(தொழில்கள்)த் துறையின் அலுவல் சார்பற்ற எண்.10JS/(GKT)/நிதி(தொழில்கள்)/2021, நாள் 27.07.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர், சென்னை – 600 104.
வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
மாநில தலைமைக் கணக்காயர் (A&E/CA/CAS), சென்னை – 600 018/09. (பெயரில்)
✓ சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 600 001.
அனைத்து மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்கள் / சார்நிலை கணக்கு அலுவலர்கள்/
சம்பள கணக்கு அலுவலர்கள்.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர்–IV, சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர்
(கைத்தறி மற்றும் துணிநூல்)/
(நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) /
(வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை – 600 009.
நிதி(தொழில்கள் / பொ.மா.க / வ.செ.பொது–1)த் துறை, சென்னை – 600 009.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, சென்னை – 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(ஏ1/பி1)த் துறை, சென்னை – 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

28/7/21
அரசு சார்புச் செயலாளர்.

28/7/2021